PR/2020/11

# Embassy of Japan

No. 20, Srimath R. G. Senanayake Mawatha, Colombo 7, Sri Lanka
TEL:94-11-269-3831~3, FAX : 94-11-269-8629
E-mail: cultujpn@sltnet.lk

ஜுலை 13, 2020

ஊடக வெளியீடு

**மனித வளங்கள் அபிவிருத்தி புலமைப்பரிசில் (JDS) செயற்திட்டத்துக்கு ஜப்பான் ரூ. 457 மில். நன்கொடை வழங்கல்**

இலங்கையின் அரச துறையில் பணியாற்றும் அதிகாரிகளின் திறன் கட்டியெழுப்பலுக்காக முன்னெடுக்கப்படும் மனித வளங்கள் அபிவிருத்தி புலமைப்பரிசில் (JDS) செயற்திட்டத்துக்காக ஜப்பானிய அரசாங்கம் சுமார் 457 மில்லியன் ரூபாயை நன்கொடையாக வழங்கியுள்ளது.

269 மில்லியன் ஜப்பானிய யென் (அண்ணளவாக ரூ. 457 மில்லியன்) நன்கொடையினூடாக, இலங்கையின் அரச துறையில் பணியாற்றும் இளம் நிறைவேற்று அதிகாரிகளுக்கு ஜப்பானின் வெவ்வேறு பல்கலைக்கழங்களில் இணைந்து தமது திறன்களை மேம்படுத்திக் கொள்ளவதற்கான வசதி வழங்கப்படும். இதனூடாக அவர்களுக்கு தமது துறைகளில் எதிர்காலத்தில் எதிர்கால தலைவர்களாக திகழ்வதற்கான தகைமையை பெற்றுக் கொள்ள முடியும். இந்த செயற்திட்டத்தின் கீழ், 17 அரச துறை அதிகாரிகள் 2021 முதல் 2023 வரையான 2 வருட காலத்துக்கு மாஸ்டர்ஸ் அல்லது PhD பட்டப் படிப்பைத் தொடர்வதற்கு ஜப்பானுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். பொதுக் கொள்கை, பொது நிதி, பொருளாதாரம், வியாபார முகாமைத்துவம், சூழல் முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான பிரிவுகளில் இந்தப் பட்டப்படிப்புகள் அமைந்திருக்கும்.

இந்த செயற்திட்டம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் 2020 ஜுலை 13 ஆம் திகதி இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் சுகியாமா அகிரா மற்றும் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை விருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆடிகல ஆகியோர் கைச்சாத்திட்டனர். இந்நிகழ்வு நிதி, பொருளாதார மற்றும் கொள்கை விருத்தி அமைச்சில் இடம்பெற்றது.

ஜப்பானின் நீண்ட கால நண்பர் எனும் வகையில், திறன் கட்டியெழுப்பல், மனித வளங்கள் விருத்தி தொடர்பான நிகழ்ச்சிகளை முன்னெடுத்து, அதனூடாக நாட்டில் நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கு நீண்ட கால அடிப்படையில் பங்களிப்பு வழங்குவது தொடர்பில் ஜப்பான் அதிகளவு கவனம் செலுத்தி வருகின்றது.

2010 ஆம் ஆண்டில் JDS செயற்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது முதல் சுமார் இலங்கையின் சுமார் 154 அரச துறை அதிகாரிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. தனிநபர் திறனைக் கட்டியெழுப்புவதில் மாத்திரம் இந்தச் செயற்திட்டம் பங்களிப்பு வழங்குவது மாத்திரமன்றி, இலங்கையின் அரச துறையின் நிறுவனசார் துறையைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்பு வழங்கும். இது இலங்கையின் வளர்ச்சிக்கும் சுபீட்சத்துக்கும் சிறந்த அடித்தளமாக அமைந்திருக்கும். (###)

*************************************************************

மேலதிக தகவல்களுக்கு அபிவிருத்தி கூட்டுறவு பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.
Tel: 011-269-3831~3 (ext.226)